தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 144

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை : கார்த்திகை 13உ சனி (28—11—53) ☆ ☆ ☆ வெளியீடு : கார்த்திகை 14உ ஞாயிறு (29—11—53)

அள்ளித் தெளித்த அவசரக்கோலம்!

"மாணவர்களைக் கூட்டுவதே புதிய திட்டத்தின் மூலக் கருத்து!"

அரசியல் சட்டக் கண் கொண்ட ஆளவு கல்விக் கண் கொள்ளத் தவறினர்!

'குறைந்த செலவில் கல்வி' என்ற சி. ஆர். கூற்றுக்கு ஆய்வுக் குழு மறுப்பு!

பாருலேகர் குழுவை நியமித்த சி. ஆர். உள் எண்ணம் நிறைவேறியது!

சென்னை, நவ. 27

"மாணவர்கள் எண்ணிக்கையை இரண்டு மடங்கு செய்வதே புதிய கல்வித் திட்டத்தின் முக்கிய மான குறிக்கோள்."

"பள்ளி ஆசிரியர்களின் சம்பளத்தைத் தாமதமின்றி உயர்த்த நடவடிக்கையை முதலில் செய்யவேண்டும். அப்போதுதான் வேலையில் ஊக்கமும் உற்சாகமும் ஆசிரியர்களிடையே ஏற்படும். நிதிநிலைக்கு ஏற்றவாறு ஆசிரியர்கள் சம்பளத்தை உயர்த்தவேண்டியது மிகவும் முக்கியமான முதல் விடயங்களில் ஒன்று. எது முடியுமோ அதை ஆசிரியர்களுக்கு உடனடியாகச் செய்யவேண்டும்."

"பள்ளி சென்று படிக்கும் ஒவ்வொரு குழந்தையும், பள்ளிக்கூடத்திற்கு அதிகதூரம் செல்லாமல் இருக்க மாகாணம் முழுவதிலும் பள்ளிகள் உள்ள இடங்களைச் சரிகட்டிக் கொள்ளவும், புதுப்பள்ளிகளை அமைக்கும் இடங்களை நிர்ணயிக்கவும் வேண்டும். இதைத் திட்டமிட்டுச் செய்யவேண்டும். திட்ட அடிப்படையில் தொடக்கக் கல்வியைப் பரப்ப வேண்டிய அவசியம்."

"தொடக்கக் கல்வியின் பிரச்சினைகளை அதிக விஞ்ஞான முறையிலும், பரந்த அளவிலும் ஆராய கல்வித் துறைத் தலைமை அதிகாரி (டி. பி. ஐ.) அலுவலகத்திலும், பல்கலைக் கழகத்திலும் ஆராய்ச்சித் துறைகளை ஏற்படுத்த வேண்டும்."

—இவ்வாறு, சென்னை அரசாங்கத்தின் புதிய கல்வித் திட்டத்தை அறிவிக்கும்படி நியமிக்கப்பட்ட பேராசிரியர் பாருலேகர் குழு சிபார்சில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இப்புதிய கல்வித் திட்டத்தை சில காங்கிரசுக்காரர்கள் உட்பட பலர், பல்வேறு காரணங்களை வைத்து எதிர்த்தனர். இத்திட்டத்தைப்பற்றி ஆராய்ந்து நிபுணர் குழு முடிவு செய்கிறவரையில் திட்டம் அமுல் செய்வதை நிறுத்தி வைக்கும்படி சட்டசபையில் மொத்தத்தில் மூன்றிலிரண்டு பகுதியினர் வாக்களித்தனர். இதையொட்டியே பேராசிரியர் பி. வி. பாருலேகர் தலைமையில் நிபுணர் குழு ஒன்றை சென்னை அரசாங்கம் நியமித்தது.

ஆனால் இக்குழுவின் முடிவு தெரியும்வரை திட்டம் அமுல் செய்யப்படுவதை அரசாங்கம் நிறுத்தி வைக்கவில்லை.

இக்குழுவில், சென்னை அரசாங்க முன்னாள் கல்வித் துறை தலைமை அதிகாரி டாக்டர் பி. எல். டே, டில்லியில் உள்ள ஜும்மா மில்லியா தலைவேந்தர் எம். முஜிப், சென்னை அரசாங்கத்தின் கல்வித் துறை தலைமை அதிகாரி என். கோவிந்தராஜ நாயுடு (இவர் தற்போது ஆந்திராவில் பணியாற்றுகிறார்.) ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர்

இக்குழு விசாரணை செய்யும்படி கூறப்பட்ட விடயங்கள் வருமாறு:—

"சென்ற ஆண்டுவரை மாகாணத்திலிருந்த தொடக்க கல்விமுறையைப் பரிசீலனை செய்யவேண்டும். இக்கல்வியின் தரத்தை எப்படி வளர்ப்பது என்பதையும், இக்கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை எப்படி அதிகரிக்கும்படி செய்வதென்பதையும்

(3-ம் பக்கம் பார்க்க)

ஆதாரக் கல்வி முறையால் ஏற்படப் போகும் அபாயம்

கல்வி அமைச்சர்கள் எதேச்சாதிகாரப் போக்கிற்கு அதிருப்தி

கல்வித்துறை முதியவர் பரான்ஞ்சபாய் தெளிவுரை

சங்கிலி, நவ. 26—

"இப்போழுது பரீட்சார்த்தமாக கையாளப்பட்டுவருகிற ஆதாரக் கல்வி, நாட்டு முன்னேற்றத்திற்கு பெருங்கேடாக விளங்கும் என்பது மெய்ப்பிக்கப்படும்."

—இவ்வாறு, பூனா கல்வித்துறை முதியவரான டாக்டர் ஆர். பி. பரான்ஞ்சபாய், தனது கருத்தைக் கூறி இருக்கிறார். அவர் மேலும் கூறியதாவது:—

"ஆதாரக் கல்வி குறித்துப் பலர் பரவலாக இந்த நாட்களில் பேசிக்கொண்டபோதிலும், அந்தக் கல்வியின் உண்மை நிலை என்ன என்பது அதனைப் போதிப்பவர்கள் கூட புரிந்துகொண்டு இருப்பதாகத் தெரியவில்லை. அதில், அவர்களுக்கு நம்பிக்கையும் இல்லை. அதுபற்றி அவர்கள் கொண்டுள்ள கருத்தை வெளிப்படையாகக் கூறுதற்கு, சர்க்கார் அதை பரீட்சார்த்தமாக அமுல் நடத்துவதில் காட்டும் ஆர்வமே காரணமாகும்."

விடுதலை அடைந்துள்ள இந்தியாவின் தேவைக்கேற்ற கல்விச் சீர்திருத்தம் செய்யப்படவேண்டியது முக்கியந்தான். ஆனால், இப்பொழுது மேற்கொள்ளப்பட்டிருக்கிற ஆதாரக் கல்வி முறை அதற்குத் தகுந்த பதில் கூறுவதாக

(3-ம் பக்கம் பார்க்க)

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

நவம்பர் 30-ல்!

☆



தோழர்கள்
அண்ணாதுரை
சம்பத்
நெடுஞ்செழியன்
நடராசன்

ஆகிய நால்வருக்கும் காலை 9 மணிக்கு சென்னை சிறைவாயிலில் மகத்தான வரவேற்பு

அன்று மாலை 5 மணிக்கு, சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் மாபெரும் விடுதலை விழாக் கூட்டம்

☆

தோழர் மதியழகன்

மூன்று மாத சிறை தண்டனை அனுபவித்துவரும் ஐவரில் ஒருவரும், தி. மு. கழகத் துணைச் செயலாளருமான தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள், செப்டம்பர் மாதம் 20-ந் தேதியிலிருந்து அக்டோபர் மாதம் 1-ந் தேதிவரை (சட்டப் படிப்புப் பரீட்சை எழுதுவதற்காக) பரோலில் வெளி வந்திருந்ததால், மேற்படி 10 நாட்களையும் தொடர்ந்து சிறையில் கழித்துவிட்டு, 10-12-53-ந் தேதி அன்று விடுதலையாவார்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

நவம்பர் 29-ல்!

☆

தோழர் மு. கருணாநிதி

☆

29—11—53 ஞாயிறு மாலை 2 மணிக்கு எழும்பூர் ரயில் நிலையத்தில் வரவேற்கப்பட்டு, ஊர்வலமாக அழைத்துச்செல்லப்படுவார்.

மாலை 5 மணிக்கு, எழும்பூர் ஆலகிரி திடலில் (டி. பி. ஆஸ்பத்திரி அருகில்) வரவேற்புக் கூட்டம் நடைபெறும்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

ஐதராபாத் அமைச்சர் குழு மீது லஞ்சக் குற்றச்சாட்டு!

— (:) —

இதை விசாரிக்க காங்கிரஸ் பார்லிமெண்டரி குழுவிற்கு அருகதை இல்லை

பொது விசாரணை தேவை என்று மக்கள் ஜனநாயகக் கூட்டணியின் கோரிக்கை

ஐதராபாத், நவ. 26—

ஐதராபாத் அமைச்சர் குழு மீது சுமத்தப்பட்டுள்ள லஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரித்து, 'வீண் புகார்' என்று முடிவு கட்டிய காங்கிரஸ் பார்லிமெண்டு குழுவின் போக்கிற்குக் கண்டனம் தெரிவித்தும், காங்கிரஸ் குழு ஒரு கட்சிக் குழுவே அல்லாது வேறு இல்லை என்று விளக்கியும், குற்றச் சாட்டுகளை பாரபட்சமற்ற பொதுமக்கள் குழு விசாரித்து முடிவுகூற வேண்டும் என்றும், மக்கள் ஜனநாயகக் கூட்டணி தீர்மானங்கள் நிறைவேற்றி இருக்கின்றன.

விசாரணை நடத்திய காங்கிரஸ் பார்லிமெண்ட் குழுவின் நோக்கமே, ஐதராபாத் மாநிலத்தை மொழிவழியில் பிரித்து அமைப்பதற்கும், மொழிவழி மாநிலங்கள் அமைவதைத் தடுத்து நிறுத்துவதற்கும் எதிராக இப்போது இருக்கும் கெடுமதிகொண்ட காங்கிரஸ் அமைச்சர் அவையின் பிடிப்பைப் பலம் பெருக்

(3-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 28—11—1953 சனி

ஜெய பேரிகை கொட்டடா!

இன்னும் இடையில் ஒரு நாள் இருக்கிறது, சென்னையில், காங்கிரஸ் கட்சியினரின் முன்னாள் ஆட்சி பீடத்தின் நெடுங் கதவுகள் திறப்பதற்கும், நமது பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தனது கருத்துக்கிசைந்த அரும்பெரும் தம்பிமார்கள் மூவருடன் வெளிவருவதற்கும். மற்றொரு இளவலான மதியழகன் உடன் வெளிவர மாட்டார். மூன்று மாதக் காவல் தண்டனை முடிவதற்குள், இடையில் பத்து தினங்கள், சட்டப் பரீட்சை எழுதுவதற்காக, அவர் வெளிவந்து இருக்கிறார். எனவே, வெளியில் இருந்த அந்த நாட்களை, அவர் சிறையில் கழிக்கவேண்டும் என்பது விதி. அதன்படி அவர் கட்டாயமாகச் சிறையில், மேலும் பத்து தினங்களைக் கழித்தாக வேண்டும்,

அரசியல் நூல் தெரிந்தவராகவோ, நேர்மையுள்ளம் படைத்தவராகவோ அமைச்சர் ஆச்சாரியார் இருப்பாரானால், மற்ற நால்வருடன் நண்பர் மதிமுகனும் வெளியில் வர சட்டஇடைப் பிறப்பிக்க வேண்டும். கொழுத்த யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும் என்ற பண்புடையவராயிற்றே அமைச்சர் ஆச்சாரியார்? அத்தகுத் திருவுள்ளரிடம், இந்தச் சிறிய காரியத்தையும் எதிர்பார்ப்பது அறிவுடைமையாகாதே!

செப்டம்பர் முதல் நாள் மாலை பொதுச் செயலாளர் உள்ளிட்ட ஐம்பெருந் தலைவர்களை, சென்னை பெனிடென்ஷரி சிறைக்கூடம், விழுங்கிவிட்டது. சரியாக மூன்று திங்கள் கழித்து, நான்கு தலைவர்களை மட்டும் திங்கட்கிழமைகாலை வெளியில் விடப்போகிறது.

அமைச்சர் ஆச்சாரியாரின் அடக்குமுறையின் விளைவாக, மூன்று திங்களாக இருண்டு கிடந்த திராவிடம் மீண்டும் ஒளிவிடப் பிரகாசிக்கப் போகிறது என்பது, வெறும் பற்றுதலால் பிறந்த கற்பனை அல்ல. திராவிடப் பெருங்குடி மக்களுக்கும், சிறையில் தள்ளப்பட்டுக் கிடக்கும் செயல் வீரர்களுக்கும் உள்ள அன்புத் தொடர்பை அறிந்தவர்களுக்கே இதன் உண்மை தெளிவாகத் தெரியும்.

தலைவர்களைச் சிறைக்குள் தள்ளிப் பூட்டியதற்குக் காரணமாக இருந்தது மூன்று; ஒன்று, ரயில் நிறுத்தம்; இரண்டு, புதிய கல்வித் திட்ட எதிர்ப்பு; மூன்று, கல்லக்குடி பெயர் மாற்ற அறப் போர்.

ரயில் நிறுத்த அறப் போராட்டம், நிகழ்ச்சி நிரல்படி ஒரே நாளோடு முடிவுற்று திராவிடப் பெருங்குடி மக்களின் தன்மான உணர்ச்சியை, ஐயத்திற்கு இடமில்லாமல் அமைச்சர் ஆச்சாரியாரும் உணர்ந்து கொண்டார்; அவர் வாயிலாக, முன்னமே உணர்ந்ததை, உறுதிப்படுத்திக் கொண்டார் பிரதமர் நேருவும்.

புதிய கல்வித் திட்ட எதிர்ப்பு அறப்போர் வீண் போகவில்லை. எதிர்பார்த்ததைவிட வெற்றியே பெற்றிருக்கிறது அறப்போரால் நமது தி. மு. கழகம் ஈடுபடுவதற்கு முன்பு, நமக்கு ஓரோர் வகையில் ஒத்தவரிடம் மட்டுமே இருந்த எதிர்ப்பு, பெரும்பாலான காங்கிரஸ் குழுவினரிடமும் அருந்து போல் பெருகிவிட்டு, அல் போல் பரந்துவிட்டது. சட்டசபையில் அமைச்சர் ஆச்சாரியாரைத் தோற்கடிக்கும் அளவிற்கு நமது அறப்போர் வெற்றி பெற்று இருக்கிறது விரிவஞ்சி, மேலும் விளக்காமல் விடுகிறோம்.

அடுத்ததும், மூன்றாவதுமாக உள்ளது கல்லக்குடி பெயர் மாற்ற அறப்போர். இப்போராட்டத்தில் நாம் முழு வெற்றிப் பெற்று இருக்கிறோம். நமது போராட்டத்தின் நியாய பலத்தை, அமைச்சர் ஆச்சாரியாரும் ஒப்பாமல் ஒப்புக் கொண்டு இருக்கிறார். டால்மியாபுரம் கல்லக்குடியாக மாறுவதில் அமைச்சர் ஆச்சாரியாருக்கு மனப்பூர்வமான விருப்பம் இல்லாமல் இருந்திருக்குமானால், புகைவண்டி நிலையப் பெயர்ப் பலகையில் போராட்டத் தலைவர் கருணாநிதி ஐந்துத் திங்களுக்கு முன் ஒட்டிவிட்டுச் சென்ற 'கல்லக்குடி'யை, இன்னும் மாற்றாமல் இருப்பாரா? அதன் பிறகு, இன்னும், நாள் தவறாமல் 'கல்லக்குடி' என்ற பெயர்த்தாள்கள் ஒட்டப்பட்டு வருவதை, பெயர் மாற்றத்தை அவர் முழுமனதுடன் விரும்புகின்ற காரணத்தால் தானே, 'கல்லக்குடி'த் தாள்களைக் கிழித்தெறியாமலும், ஒட்டுகின்ற அறப்போர் வீரர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்காமலும் அமைச்சர் ஆச்சாரியார் இருந்து வருகிறார்? அவரைப் பொறுத்த வரையில், இதற்குப் போக்கிற்கு வேறு காரணம் இருந்தாலும் இருக்கலாம்! அதுபற்றி நமக்குக் கவலை இல்லை

'கல்லக்குடி' பெயர் மாற்றத்தை, அவருடைய சலனமற்றத் தன்மையைக் கண்டு, அவரும் நமது கிளர்ச்சியின் நியாயத்தை உணருகிறார் என்று, நல்ல முறையில் நாம் கொள்வதிலும் தவறு ஒன்றும் இல்லை இதுவும் பொருத்தமான காரணங்களில் ஒன்றாகும் என்பதில் ஐயமில்லை.

மூன்று போராட்டங்களைப் பொறுத்தவரையில் நாம் வெற்றியே பெற்று இருக்கிறோம். தலைவர்கள் உள்ளே போகும்போது, நமது அமைதியான நியாயமான நடவடிக்கை, போராட்டக் கட்டத்தில் இருந்தது. போர்க்களத்தில், மும்முரமாக நமது தி. மு. கழகம் ஈடுபடுவதற்கு முன்னதாகவே தலைவர்களை, ஆச்சாரியார் சர்க்கார், போராட்டம் சிதறிவிடும் மங்கிவிடும் என்று, மனப்பால் குடித்து, சிறையில் தள்ளியது; ஆனால், விளைவு நேர்மாறாக இருக்கிறது.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

★

இன்று (28—11—53) வரை வசூலாகியுள்ள தொகை ரூ. 5,061—5—10.

நம் தலைமைக் கழகம் (தி. மு. கழகம்) மூலம் நிதி வசூலிக்க ரசீது புத்தகங்கள் பெற்றுக்கொண்ட தோழர்களிடமிருந்து, வசூல் ரூபாயும், ரசீது புத்தகங்களும் வந்து சேரவில்லை. இனியும் தாமதியாமல், உடன் அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

சிங்கப்பூர், திருப்பூர் தோழர்கள் அனுப்பிய மணியார்டரில், 'வசூல் விபரம் தபாலில் வருகிறது,' என்று எழுதியுள்ளனர்; ஆனால், இன்றுவரை விபரங்கள் இங்குவந்து சேராத காரணத்தால், 'நம் நாடு'வில் பிரசுரிக்கப்படவில்லை. மற்ற வசூல் வரவு வந்த தொகைகள் முழுதும் 'நம் நாடு'வில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

30—11—53-ல், நம் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களிடம், வரவு-செலவு கணக்குகள், வசூல் தொகைகள் ஒப்படைக்கப்படும்.

30—11—53 முதல், வழக்கு விசாரணை ஆரம்பமாகிறது. நம் விருப்பப்படி ரூ 20,000 (இருபதினாயிரம் ரூபாய்) சேர்த்துக் கொடுப்பது, நம் தோழர்களுடைய நீங்காக் கடமையாகும்.

'அறிவகம்' சென்னை 28-11-53 — ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., பொறுப்பாளர், தி. மு. கழகத் தலைமை நிலையம்

தூத்துக்குடி சதி வழக்கு

★

தூத்துக்குடி சதிவழக்கு விசாரணை 30—11—53 முதல் தொடர்ந்து திருநெல்வேலியில் நடைபெறும் என, 'ட்ரங்க்' மூலம் நமது நிருபர் அறிவிக்கிறார்.

வரதட்சணை முறை: சட்டவிரோதமாக்கப்படும்

அமைச்சர் உறுதிமொழி

புதுடெல்லி, நவ. 27—

வரதட்சணை வாங்குவதையும், கொடுப்பதையும் தடை செய்ய சட்டம் இயற்றுவதாக, இன்று மக்கள் சபையில் சட்டமந்திரி சி. சி. பிஸ்வாஸ் வாக்குறுதி அளித்தார்.

மேலும் அவர் கூறியதாவது:- "இந்த வாக்குறுதி எப்போது நிறைவேற்றப்படும் என்று தெளிவாகக் கூறமுடியாது. வரதட்சணைக் கொடுமையை எப்படி ஒழிப்பது என்பது குறித்து உறுப்பினர்களும், மற்றவர்களும் வழிகூற வேண்டும்" என்றார்.

"பாருலேகர் குழு (சி. ஆர்.) திட்டத்தின் சிறப்பை உறுதிப்படுத்தவில்லை!"

'செலவுக் குறைவு-தர வளர்ச்சி' பற்றியும் குழு முடிவு நம்பிக்கை அளிக்கவில்லை!

சிறைக்குள் தள்ளப்பட்டபொழுதும், தலைவர்கள், திராவிடப் பெருங்குடி மக்களின் செல்வாக்குமிக்க தலைவர்களாகத் தான் இருந்தார்கள். வெளிவரும் இன்றும் அவர்கள் அப்படியேதான் இருக்கிறார்கள்; அந்தச் செல்வாக்கு சிதையவில்லை. அதற்கு மாறாக புதிய ஊக்கமும், ஊக்கமும் பெற்றுத் திகழ்கிறார்கள். தம்மரும் தம்பிமார்கள், தாம் விட்டுச் சென்ற இடத்திலிருந்து பணிபுரிந்து, வெற்றிக் களிப்புடன் விளங்குவதைக் கண்டு களிக்கும் கருத்துடையவர்களாக அவர்கள் வெளியே வருகிறார்கள். மூன்று திங்களாக நாட்டில் நடந்துள்ள வரலாற்றுச் சம்பவங்களைக் கண்ணுற்று அவர்கள் உள்ளம் பூரிப்படையத்தான் போகிறது! அவர்கள் கண்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் பளிங்கு நீரைத் தேக்கத்தான் போகிறது.

ஆனால்! ஆனால்! அவர்களைத் தள்ளிப் பூட்டி வைத்து, முறை தவறி ஆட்சிபுரிந்து வருகிற அமைச்சர் ஆச்சாரியார், மூன்று திங்களாகப் பெற்ற விருதுகள் என்ன?

புகழை—ஏதாவது இருந்திருந்தால்—அதைப் பறிகொடுத்து இருக்கிறாரா?—பாதுகாத்துக் கொண்டு இருக்கிறாரா?

இந்த மூன்று திங்களுக்குள் அவருக்கு ஏற்பட்டுள்ள செல்வாக்குச் சரிவு, உலக வரலாற்றிலேயே ஒரு அற்புதம்! வேறு எவருக்கும், இவ்வளவு குறுகிய காலத்துக்குள் சம்பவிக்காத ஒன்று!

சொந்தக் கட்சியினரால், தூற்றப்படுகிறார்! இதன் விளைவாக, அவரும், அறநெறி அனைத்தும் துறந்து இழிகால அபாய நடைமுறைகளை மேற்கொண்டு, தன் கை சிக்கிய அதிகாரத்தை அட்டைபோல் பற்றிக் கிடக்கத் துடியாய்த் துடிக்கிறார்! ஒவ்வொரு வினாடியும் இந்தத் திருக்கூத்தைத் தான் நாட்டு மக்கள் கண்டும் கேட்டும் ரசித்து வருகின்றனர்! அவரிடம் இருந்ததாகச் சொல்லப்பட்டு வந்த பல துறை அறிவு ஆற்றல், அத்தனையும் சிலரின் அறியாமையால் உருவானது என்பதும், அவர் இயல்பாகவே மிக மிகச் சாதாரண அறிவினர்தான் என்ற மகத்தான உண்மையும் விளக்கமாகி வருகிறது. இது திராவிட மக்களுக்குக் கிடைத்துள்ள கிடைத்தற்கரிய வெற்றி.

இந்த வெற்றியைக் காண நமது தலைவர்கள் திங்கட்கிழமை காலை வருகின்றனர். முகமலர்ந்து வரவேற்போம் அவர்களை. நமது லட்சியம் வெற்றி பெற்றது என்று ஜெயபேரிகைக் கொட்டுவோம், வாரீர் தோழர்காள்!

தலைவர்களைக் காணப் போகிறோம் என்ற ஆர்வமிகுதியாலும், கட்டுமீறிய உற்சாகத்தாலும், சென்னை சிறைவாயில் முன்னரும் சரி, மாலை விடுதலை விழாக் கூட்டத்திலும் சரி, நமது கழகத் தோழர்கள், கண்ணியம், கட்டுப்பாடு, அமைதி ஆகிய நமது உயர் கோட்பாடுகளை என்றுமபோல் கைகொள்ள மறந்துவிடக்கூடாது. பாதுகாப்புத் துறையினர் கடமையைச் செய்வதற்கு, நமது தோழர்கள் உதவியாக இருக்க வேண்டுமே யல்லாது, உபத்திரவமாக இருக்கக்கூடாது. கண்டிப்பாக இது, கருத்துள் கொள்ளப்பட வேண்டும்.

பெரு உள்ளம் கொண்டு, மகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம், தலைவர்களை!

"கல்வித் கண்கோண்டுநோக்குமிடத்து, (பாருலேகர்) குழு, புதிய கல்வித் திட்டத்தின் சிறப்பை உறுதிப்படுத்தி இருப்பதாக நமது அறிவுக்குப் புலனாகவில்லை. அதுவுமல்லாமல் நடைமுறையில் நிறைவேற்ற இயலாத செலவுக் குறைவில் இத்திட்டம் வெற்றி தருமென்பதிலோ, அதே காலத்தில் கல்வித் தரத்தை வளர்ச்சியுறச் செய்யுமென்பதிலோ, குழு முடிவு நமக்கு நம்பிக்கை அளிப்பதாக இல்லை."

—[இது பற்றிய 'இந்து' தலையங்கம் முழுதும் 30—11—53-ல் 'நம் நாடு' இதழில் வெளியிடப்படும்.]

இலங்கை அமைச்சர் குழு:

நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி

கொழும்பு, நவ. 27—

இலங்கை அமைச்சர் குழு மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரரேபணையை, இலங்கைப்பிரதிநிதி சபை இன்று நிராகரித்தது. பிரரேபணைக்கு எதிராக 58 வோட்டுகளும், சாதகமாக 17 வோட்டுகளும் கிடைத்தன

மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாப் பிரரேபணையை எதிர்க்கட்சித் தலைவர் பண்டாரநாயகா இன்று, இலங்கை ஜனப்பிரதிநிதி சபையில் பிரரேபித்தார்.

அவசரமான பிரச்னைகளை சர்க்கார் தீர்த்து வைக்கவில்லை யென பிரரேபணை கூறுகிறது.

நியூயார்க், நவ. 28—

மணிக்கு 2,000 மைல் செல்லக் கூடிய ஜெட் விமானத்தை அமெரிக்கா தயாரித்துள்ளது. இது சம்பந்தமான சகல தகவல்களும் இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

நேற்று (27—11—53) தொடர்ச்சி	4659—4—5
சுரோடு எ. கோவிந்தசாமி	5—0—0
கிழக்கரை மதி வளர்ச்சி மன்றம் வி நடராசன்	3—0—0
பொள்ளாச்சி எம். விஜயராகவன்	2—0—0
அரூர் என். சுந்தரம்	2—0—0
,, சி. எ. சொக்கலிங்கம்	2—0—0
,, எச். எல். முருகேசன்	2—0—0
,, சி. ஆர் செல்வி	2—0—0
,, பி. ராசந்திரன்	1—0—0
,, அன். முருகன்	1—0—0
,, வி. கண்ணன்	1—0—0
,, டி. கே. வையாபுரி	1—0—0
,, என். எல். கோபால்	1—0—0
,, என் ராமசாமி	1—0—0
,, பி. சீதாராமன்	1—0—0
,, கே. ராசமாணிக்கம்	1—0—0
,, சி முருகன்	1—0—0
,, எ செயாப்தீன்	1—0—0
,, எச். எம். சண்முகம்	1—0—0
,, என். கோவிந்தன்	2—0—0
,, குப்பண்ணன்	2—0—0
,, சி. கே. ராமு	2—0—0
,, சின்னதம்பி, கண்ணன், சென்னையன், குசலன், கோவிந்தன், தங்கவேலு ராமானுசம், முதலியோர்	3—8—0
சென்னை-21 மனோன்மணி மில் உரிமையாளர் என். கே. வீரமணி	101—0—0
சென்னை-21 மனோன்மணி மில் ஊழியர்கள் ந. காசிராசன மூலம்:-	
ந. காசிராசன்	2—0—0
அ. முத்தையா	2—0—0
ஜே பகவத்சிங்	2—0—0
ஜே. லட்சுமணசிங்	2—0—0
எஸ். என். வரதராசன்	2—0—0
என். கே. பி மணி	2—0—0
ஜே. லோகநாதன்	2—0—0
கே. எம். பெருமாள்	2—0—0
தோழர் ஏ கோவிந்தசாமி எம் எல்.ஏ, அவர்கள் மூலம் வசூல் :—	
திருச்சி திராவிட மாணவர் முன்னேற்றக் கழக துவக்க விழாவில் உண்டி வசூல்	70—4—2
திருச்சி—மலைக்கோட்டை சம்பந்து	5—0—0
திருச்சி—புத்தூர் முனியன்	2—0—0
,, —உறையூர் வெங்கடாசலம்	1—0—0
நீடாமங்கலம் ரயில் நிலையத்தில் வசூல்	1—0—0
திருவாரூர் தி மு. கழகத் தோழர்களால் வசூல், சமரச பாண்டியன் மூலம்	25-12—0
திருவாரூர் தி. மு. கழகப் பொதுக் கூட்ட உண்டி வசூல்	31-10—7
திருவாரூர் டாக்டர் விஜயாரகவன் மூலம்	5—0—0
,, சிறுவன் சுகுமார்	1—9—3
குறுக்கத்தி என். வில்வநாதன்	1—0—0
,, என். முனியன்	1—0—0
,, டி. ரங்கையன்	1—0—0
,, ஜி. சந்தானம்	1—0—0
,, எம்.செல்லப்பா, அப்துல் காதர்	1—0—0
கோவை பழனிச்சாமி	1—0—0
அறந்தாங்கி தி. மு கழகப் பொதுக் கூட்ட உண்டி வசூல்	12-10—0
அறந்தாங்கி தி. மு. கழக மாணவர்கள் வசூல்	5—0—3
பெரியகுளம் தி. மு கழகப் பொதுக் கூட்ட உண்டி வசூல்	15-15—3
பெரியகுளம் மேற்கு ரத வீதி கொடியேற்று விழாவில்	1—0—0
தேனி தி மு கழகத் தோழர்	1—0—0
புதுப்பாளையம் (கடலூர் புதுநகர்) தி. மு. கழகம்	37—0—0
திருப்பாப்புலியூர் தி. மு. கழக தோழர்கள் ஆர். ராமானுசம், லட்சுமணன், ரங்கநாதன், சின்னதம்பி, முத்துசாமி, கிருஷ்ணசாமி, சுப்ரமணியம் ஆகியோர்	5—0—0
பண்ருட்டி தி மு கழகப் பொதுக்கூட்டத்தில் வசூல்	10-11-11
,, மாலை ஏலம்	2—0—0
சென்னை 42-வது வட்டம்	
,, மு கோதண்டபாணி	2—0—0
,, மு. புருஷோத்தமன்	1—0—0
,, ஜி பெருமாள்	1—0—0
,, ஜி. தேவராஜ்	1—0—0
,, கே. கண்ணன்	1—0—0
,, கே. ஷண்முகம்	1—0—0
ஆகமொத்தம் ரு	5061—5-10

புதிய வெளியீடுகள்!

★

அறிஞர் அண்ணா

மாஜி கடவுள்கள் சாதா ரூ. 3—0—0
அட்டை பயிண்டு. ரூ. 3—8—0

கடவுள்கள், கடவுள் கொள்கைகள் பற்றிய சிறந்த ஆராய்ச்சி நூல். பல நாட்டுக் கடவுளரின் அழகிய படங்கள். 260 பக்கங்கள். அழகிய மூவர்ண அட்டை.

பார்வதி பி. ஏ. ரூ. 3—0—0

கல்வியறிவும், இளமையும், சாகசமும் நிறைந்த ஒரு அடிப் புள்ள பெண்ணின் கதை. அழகிய மூவர்ண அட்டை.

க. அன்பழகன், எம். ஏ.

வளரும் கிளர்ச்சி ரூ. 0—8—0

டாக்டர் நாயர் காலத்திலிருந்து இன்றுவரை திராவிடர் இயக்கத்தின் சிறந்த வரலாறு.

தொண்டா? துவேஷமா? ரூ. 0—8—0

நமது இயக்கத்தின் அடிப்படைக் கருத்தினை எடுத்துக் கூறும் சிறந்த ஆராய்ச்சி நூல்.

இராதாமணாளன்

கானல் நீர் ரூ. 1—0—0

சரித்திரச் சம்பவங்கள் நிறைந்த சுவை மிகுந்த கதை மூவர்ண அட்டை.

கலைஞர் கருணாநிதி

அல்லி தர்பார் ரூ. 1—0—0

திருவாரூர் இளவலின் வீர முழக்கம். மூவர்ண அட்டை.

அச்சில்

கலைஞர் கருணாநிதி எழுதிய: அகிம்சா மூர்த்திகள்
புத்தர்பிரான் அருளிய: தம்மபதம்

★

பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.

ஆளின் தெளித்த அவசரக்கோலம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ந்து, அறிவிக்க வேண்டும்.

புதுக் கல்வித் திட்டத்தையும், மேலே குறிப்பிட்டுள்ள விடயங்களைக் குறித்தும் திட்ட வேலை முறையை ஆராய்ந்து, சிபாரிசுகள் செய்ய வேண்டும்."

இக்குழுவின் சிபாரிசுகள் வருமாறு :—

"மாணவர்கள் எண்ணிக்கையை இரண்டமடங்கு செய்வதே இததிட்டத்தில் முக்கியமான குறிக்கோள்." ஆனால் இது மட்டும் இத்திட்டத்தின் குறிக்கோளல்ல. பள்ளிக்கு வெளியே குழந்தைகள் என்ன செய்கிறார்களென்பதற்கும், இத்திட்டம் சம முக்கியத்துவம் அளிக்கிறது. பள்ளிக்கு வெளியே குழந்தைகளின் நடவடிக்கைகள், கல்வியின் உட்பகுதியாகவே இத்திட்டம் கருதுகிறது. இத திட்டம் புதுமையானது. புத்தகப் படிப்பை மட்டும குழந்தைகளுக்குக் கற்பிக்க இத்திட்டம் முயலவில்லை. இதோடுகூட முன் முயற்சிக்கு வாய்ப்பளிக்கவும், குழந்தைகள் வாழுகின்ற சமூகத்தின் வாழ்க்கை, வேலைகளில் அவர்களைப் பங்கு கொள்ளச் செய்யவும் இத்திட்டம் முயலுகிறது.

கல்வி விடயத்தில் இத்திட்டம் மிகவும் சிறந்தது. அரசியல் சட்டத்தின் கட்டளையை நிறைவேற்ற நடைமுறையில் வழியை இததிட்டம் வகுக்கும்.

அரசியல சட்டம் (1950) அமுல் செய்யத் தொடங்கிய பத்து ஆண்டுகளுக்குள்ளாக 14 வயதுள்ள எல்லாக் குழந்தைகளையும் கல்வி கற்கும்படி செய்ய வேண்டுமென்று மாகாண அரசாங்கங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறது.

இக்குழு மொத்தம் 22 சிபாரிசுகளைச் செய்கிறது. இவைகளில் முக்கியமானவைகள் வருமாறு :

"தொடக்கப் பள்ளிகளின் பாடத் திட்டத்தை மாற்றியமைக்க விரைவில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்; 15 ஆண்டுகளுக்கு முன் கல்வியின் பாடத் திட்டம் கொண்டுவரப்பட்டது. அதிலிருந்து எவ்வளவோ மாறுதல்கள் கல்வித் துறையில் ஏற்பட்டு விட்டன;

இக்கல்வித் திட்டத்தை நகர சபைப் பகுதிகளில் உள்ள தொடக்கக் கல்வி பள்ளிகளில், எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு

பெரியார் உடல் நிலை

திருச்சி, நவ. 26—திராவிட கழகத் தலைவர் பெரியார் ஈ. வே. ரா. அவர்களுக்கு சென்ற நான்கு நாட்களாக 103, 104 டிகிரி காய்ச்சல் அடித்து வந்தது. திருச்சி சர்க்கார் ஆஸ்பத்திரி சர்ஜன் தோழர் விசுவநாதம் கவனித்து வருகிறார்.

சர்க்கார் விவசாய துறையில் மற்றொரு கையாடல்!

காங்கிரஸ் தலைவரே கைது செய்யப்பட்டுள்ளார்

வேலூர்(சேலம்), நவ. 27—29—10—53ல், விவசாய ஆபீசில் திருட்டுப் போன ரூ. 5039—13—0-வை, சப்-இன்ஸ்பெக்டர் தோழர் பூபதி ராஜ் தலைமையில் துப்பறியும் குழு ஒன்று கண்டு பிடித்துள்ளது.

இதில் சம்பந்தப்பட்டதாக வேலூர் கோவாப்ரேடிவ் அர்பன் பாங்கி முன்னாள் பிரசிடெண்டும், கிராம காங்கிரஸ் கமிட்டி பொக்கிஷதாரரும், தற்போதைய பஞ்சாயத்துபோர்டு உப தலைவருமான எஸ். நாராயணசாமியையும், பஞ்சாயத்து போர்டு 2-வது வார்டு மெம்பர் ஏ. நடேசனையும், மற்றும் ஐந்து பேர்களையும் 26—11—53-ல், கைது செய்து, ரிமாண்டில் சப்-ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கிறது.

களவுபோன சொத்துக்களில், நடேசன் வீட்டிலிருந்து ரூ 1700—0—0-ம், நாராயணசாமி உறவினர்களிடமிருந்து மீதி ரூபாய்களையும் கைப்பற்றியிருப்பதாக தெரிகிறது.

மேலும் போலீசார் விசாரணை செய்து வருகிறார்கள். வேலூரில் ஒரே பரபரப்பாக இருக்கிறது. பெட்டியை, ஊர்க்கோடியிலுள்ள பாழுங் கிணற்றிலிருந்து எடுத்துக் கொடுத்தார்கள். (க. நி.)

ஐதராபாத்...........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இயதாக்குவதேயாகும். அதுவுமல்லாமல். இப்போது சட்ட சபை முன் விவாதத்தில் இருந்து வரும் நிலக்குடி வார மசோதாவில், எந்த விதமான முற்போக்கான, அவசியமான திருத்தங்களைச் செய்யாமல் தடுப்பதற்குமே இந்த காங்கிரஸ் அமைச்சர் குழுவின் கரத்தை பலப்படுத்தவேண்டியது காங்கிரஸ் பார்லிமெண்ட் குழுவிற்கு முக்கியமாகிறது.

இப்போது விவாதத்தில் உள்ள மசோதாவில் முக்கியமான திருத்தங்கள் செய்யப்படவில்லையானால், ஏழை உழவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குப் பதிலாக, அவர்களை நிலத்திலிருந்து விரட்டுவதற்கும், பெரும் நிலக் கிழார்களின் ஆதிக்கத்தைக் கெட்டிப்படுத்துவதற்கே பயன் படும் என்றும், எனவே, இதை முழு மூச்சாக எதிர்க்க சட்ட சபை உறுப்பினர்கள் தயாராக வேண்டுமென்று கேட்டுக் கொண்டும், மக்கள் ஜனநாயகக் கூட்டணி மாநாட்டில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஆதாரக் கல்வி......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அறவே இல்லை.

ஆங்கிலத்தின் முக்கியம்

தாய் மொழியையும், தேச மொழியையும் பள்ளியில் பயிலுவதற்கு முக்கியத்துவம் கொடுப்பதினால், ஆங்கில மொழியைப் புறக்கணித்து விடக்கூடாது. ஆங்கிலம், நவீனவிஞ்ஞானத்தின் மொழியாக இருப்பதோடு, அனைத்து நாட்டின் தொடர்பு உண்டாக்குவதாக இருக்கிறது.

எதேச்சாதிகாரம்

"உயர்நிலைக் கல்வி அளிப்பதில் ஒருமைப்பாடும், ஒரே நிலையும் இருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொரு கல்வி அமைச்சரும் தங்கள் தங்களுக்கு உரிமை இருப்பதாக நினைத்துக்கொண்டு, கல்வித் துறையில் விருப்பம் போல் தங்கள் சிறுமை குணத்தைப் பரீட்சிக்கத் தொடங்கி விடுகிறார்கள்."

விரைவில் அமுல் நடத்த வேண்டும்.

பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் எண்ணிக்கையைக் கூட்டுவதை முக்கியமான குறிக்கோளாககொண்டு முறையாக இயக்கம் நடத்த அதிகார, அதிகாரம் பற்றற்ற ஏஜன்சிகள் வளங்களை இணைப்பு முறையில் இயங்கச் செய்ய, தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். தங்கள் தங்கள் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளில் பல்வேறு கைத்தொழில்கள் பற்றிக் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுவதை மேற்பார்வையிட தொழில் வல்லுனர்களுக்கும் பயிற்சி அளிக்கும் திட்டத்தைத் தயாரித்து அதை கூடிய விரைவில் அமுல் நடத்தவேண்டும்.

4000 பேர் உள்ள பள்ளி இல்லாத இடங்களில் பள்ளிகளைத் திறக்கவேண்டியது மிகவும் முக்கியம்.

புதுக் கல்வித் திட்டத்தில் கூறப்பட்டுள்ள படிப்புத் திட்டம், குறிக்கோள்கள் முழுவதையும் நன்குதத் தெரிந்து கொள்ள எல்லாத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வாய்ப்பளிக்க, முறையான ரீதியில் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்; இத்திட்டத்தின் எல்லா விளைவுகளையும் பற்றி மாதந்தோறும் ஆசிரியர்களைப் பரீட்சை செய்து பார்ப்பது நல்லது.

ஒவ்வொரு பள்ளிக்கும் ஒவ்வொரு மாதமும் விளையாட்டு, கலாசார, பொழுதுபோக்கு நடவடிக்கைகளை நடத்த குறைந்தது இரண்டு நாட்கள் ஒதுக்கவேண்டும்.

கல்லக்குடி அறப் போராட்ட வழக்கு

வழக்கறிஞர்களின் வாதம்

திருச்சி, நவ. 28—

24—11—53 காலை 11 மணிக்கு, திருச்சி சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் திரு. கே. ராதாகிருஷ்ண மேனன் முன்னிலையில், கல்லக்குடி அறப் போராட்ட வழக்கு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எல்லாத் தோழர்களும் நீதி மன்றத்தில் இருந்தனர். முன்னாள் விசாரணையில், எல்லாத் தோழர்களின் வாக்குமூலங்களும் பதிவு செய்யப்படுவது முடிவடைந்து விட்டதால், இன்று, வழக்கறிஞர்களின் வாதம் தொடங்கியது:—

தோழர்களின் சார்பில் வழக்கறிஞர் திரு. எம். கலியாணசுந்தரம் செய்த வாதமாவது:—

“நான், கோர்ட்டார் அவர்களை எதிரிகள்மீது குற்றப் பத்திரிகை வாசிக்குமுன்பே விடுதலை செய்து விடும்படி கேட்கவில்லை; ஆனால், சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகளின் மேல் சுமத்தப்பட்டிருக்கும் இ. பி. கோ. 147, 149, 332 சட்டங்களும், ரயில்வே சட்டமான 122, 128 பிரிவுகளும் பொருந்துமா என்று கோர்ட்டார் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.”

“தி. மு. கழகம் நடத்திய போராட்டம், டால்மியாபுரத்தை, ‘கல்லக்குடி’ என்று மாற்ற வேண்டுமென்று செய்த போராட்டம்; அவர்கள் ஏற்கனவே திட்டமிட்டபடி, அவர்களின் கொள்கையை மக்களும், அரசியலாரும் நன்கு கவனிக்கும்படி செய்யவே, செயல் ரூபமான போராட்டம் நடத்தினார்கள் ஆனால், தி. மு. கழகத்தின் திட்டத்தில், ரயிலை நிறுத்திப் பொது மக்களுக்கு இடையூறுகள் செய்ய வேண்டுமென்றோ, அரசாங்க உத்தியோகஸ்தர்களைத் தாக்க வேண்டுமென்றோ, அவர்களை வேலை செய்யும்போது தடை செய்ய வேண்டுமென்றோ இல்லை.

“சாத்வீகமான முறையில், டால்மியாபுரத்தை ‘கல்லக்குடி’ என்று பெயர் மாற்றும் போராட்டத்தை, ‘டால்மியாபுரம்’ என்ற பெயர்ப் பலகையில், ‘கல்லக்குடி’ என்ற பெயர்த் தாளை ஒட்டுவதன் மூலமும், ‘நேரடி நடவடிக்கை’ என்பதைக் கண்டிக்க, ரயிலை நிறுத்தி, ரயில் தண்டவாளத்தில் உட்காருதல் என்ற இரண்டுந்தான் தி. மு. கழகத்தின் போராட்டத் திட்டங்கள்.

“தி. மு. கழகத்தினர், டால்மியாபுரத்தில், சாத்வீகமான முறையில் அறப்போர் நடத்தினார்கள். போர் முறை, இந்நாட்டில் 40 ஆண்டுகளாகக் கையாளப்பட்டு வருகிறது. டால்மியாபுரத்தில் பகல் 1-40 மணி வரை எல்லா நிகழ்ச்சிகளும் ஒருவித கலவரமுமின்றி நடந்திருக்கிறது.”

“முதலாவது சாட்சியான அரியலூர் டிப்டி கலெக்டர் கூறுகிறார்: காலையில் இரண்டு தடவையும் நான் கூட்டத்தாரைச் சட்ட விரோதமானவர்கள் என்று தீர்மானிக்கவில்லை” என்கிறார்; ‘கூட்டத்தினர் நன்கு நடந்து கொண்டனர்” என்கிறார்.

“11-30 மணிக்கு டால்மியாபுரம் தொழிலாளர்களும் சேர்ந்தனர்; கூட்டம் 2000 பேர் ஆகக் கூடியது பகல் 1-30 மணிக்கு கூட்டம் 2000-மாக இருந்தது அரியலூர் டிப்டி கலெக்டர் நிந்தக் கூட்டத்தில் உள்ள மக்களிடம் பிரயாணச் சீட்டு இருக்கிறதா என்று பரிசோதிக்க ஆரம்பித்தார். அந்தச் சமயம் நெருக்கடி ஏற்படவே தடியடிப் பிரயோகத்தை மிதமாகப் பிரயோகித்திருக்கிறார். அதனால் கலவரம் அதிகரித்து எதிரிகள் விழுந்திருக்கின்றனர். பிறகு துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. தி. மு. கழகத்தினர், கற்களை எறியும் திட்டத்தினர் அல்லர்; சந்தர்ப்பம் கூட்டத்தினரை அவ்விதம் செய்யும்படி செய்திருக்கிறது.”

“இவர்களை முன் இரு தடவை செய்ததுபோல் வைத்து செய்திருக்கலாம்; ஆனால், அதற்கு பதிலாக தடியடிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். தி. மு. கழகத்தினர் எந்தப் பலாத்காரச்செயலையும் செய்யவில்லை. அவர்கள் திட்டம் சாத்வீகமானதே; அவர்கள், தங்கள் திட்டம் பரந்து தெரியவேண்டுமென்பதற்காகவே போராட்டம் நடத்தினர்.”

“ரயில்வே சட்டப்படி, ரயில் தண்டவாளத்தில் உட்கார்ந்து, பொது மக்களுக்கும், பிரயாணிகளுக்கும் இடையூறு செய்வது அவர்கள் திட்டமல்ல. சாட்சிகள் கூற்றிலிருந்து, கூட்டத்தினரில் பெரும்பாலோரும் தண்டவாளத்தில் அமர்ந்திருக்கின்றனர். துப்பாக்கிப் பிரயோகத்தால் இருவர் இறந்தும், பலர் அபாயகரமாக காயமும் அடைந்திருக்கிறார்கள். இவ்விதம் போலீசார் செய்தது தவறு இல்லையென்று முடிவு செய்ய, இவ்வழக்கு இல்லை என்று கூறவோ, தி. மு. கழகத்தினர் எந்தக் குற்றமும் செய்யத் திட்டமிடவில்லை என்பதைக் கூற ஆசைப்படுகிறேன்.

“தி. மு. கழகத்தினர், ரயில் தண்டவாளத்தில் தங்கள் கொள்கையை வெளிக்காட்டவே உட்கார்ந்ததால், ரயில்வே சட்டம் 122, 128-ன் கீழ் இவர்களைக் குற்றவாளிகளாகக் கருதக் கூடாது.

“தி மு. கழகத்தினர் எந்த ஆயுதமும் தாங்கிப் போகவில்லை; ஆகையால், அவர்கள் மீது இ. பி. கோ. 147 சட்டத்தைச் சுமத்தக் கூடாது. அரசாங்க உத்தியோகஸ்தர்களைத் தாக்கவோ, அவர்கள் வேலை செய்யும் போது தடை செய்யவோ. ஒரு சிலர், தி. மு. கழகத்தினர் டால்மியாபுரம் செல்லவில்லை; ஆகையால், அவர்கள் மீது இ பி கோ. 332, 149 சட்டப்படி குற்றவாளிகள் எனத் தீர்மானிக்கக் கூடாது. கல்லால் அடித்ததை, யார், யாரை அடித்தார்கள் என்று தனிப்பட்ட முறையில் தீர்மானிக்க முடியாமலிருக்கிறது. குற்றப் பத்திரிகையில், இந்த எதிரிகளுடன் மற்ற கூட்டத்தினர் 2,000 பேர்களையும் எதிரிகளாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகையால், கூட்டத்தில் தி. மு. கழகத்தினர் இருந்தார்கள் என்றதால், கூட்டத்தால் விளைவிக்கப்பட்டவைகளுக்கு தி. மு. கழகத்தினர்மீது குற்றம் சுமத்தக்கூடாது.”

சர்க்கார் வழக்கறிஞர் விவாதம்

சர்க்கார் வழக்கறிஞர் திரு மகாதேவ சாஸ்திரியார் பின் விவாதித்ததாவது:—

“குற்றப் பத்திரிகையில், 147, 332, 337 கூட 149 இ. பி. கோ., 120, 128 ரயில்வே சட்டப்படி எதிரிகள்மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. சாட்சியங்களிலிருந்து, 15—7—53-ம் தேதி எதிரிகள் டால்மியாபுரத்தில் இருந்திருக்கிறார்கள் என்று திட்டமாகக் கூறுகிறேன். 13, 14, 23, 24 எதிரிகளைத் தவிர மற்ற எல்லா எதிரிகளும் தாங்கள் டால்மியாபுரத்தில் 15-7-53-ம் தேதி இருந்திருக்கிறோம் என்கிறார்கள். 16, 21, 23, 24 எதிரிகளைத் தவிர மற்றவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தால் காயமடைந்திருக்கிறார்கள். இவர்களுடைய காயங்களுக்கு மருத்துவ அத்தாட்சிகளும் தாக்கலாகியிருக்கின்றன. இதனாலும் எதிரிகள் டால்மியாபுரத்தில் அன்று இருந்திருக்கிறார்கள் என்று நிச்சயமாகிறது. அதோடு மல்லாமல் 23, 17-வது எதிரிகள் லால்குடி ரயில்வே நிலையப் புகார் புத்தகத்தில் காயப்பட்டவர்களின் பெயர்களைக் குறித்திருப்பதால், இவர்களும் டால்மியாபுரத்தில் இருந்திருக்கிறார்கள் என்றாகிறது.

“ரயில்வே நிலையத்தில் பெருந்திரளாகக் கட்டுப்பாடான, சட்ட விரோதமான கூட்டமாகத்தான் கூடியிருக்கிறார்கள். முதல் இரண்டு நிகழ்ச்சிகள் கலவரமின்றி நடந்தாலும், பகல் 1-50 மணிக்கு 2,000 பேர்கள் கூட்டமாகக் கூடி ‘ராஜாஜி ஒழிக! போலீசு ஒழிக,’ என்று கூச்சலிட்டுக் கலவர மனப்பான்மையுடனிருந்ததால் அரியலூர் டிப்டி கலெக்டர் கூட்டத்தைச் சட்ட விரோதமான கூட்டமென்று தீர்மானித்திருக்கிறார். மேலும் கற்களை எறிந்து போலீசுக்காரர்களைக் காயப்படுத்தியும், அவர்களை வேலை செய்ய முடியாதபடியும் செய்திருக்கிறார்கள். இவர்கள் திட்டப்படி, ‘கல்லக்குடி’ என்ற பெயர்த் தாளை, இரு பெயர்ப் பலகைகளிலும் ஒட்டிய பிறகு அவர்கள் தங்கியிருப்பதாலும், இவர்கள், கலக நிமித்தம் கூடியிருக்கிறார்கள் என்று நிச்சயமாகிறது. இதனால் இவர்கள் மீது ஏற்பட்டிருக்கும் இ பி கோ. 147, 143 சட்டப்படி குற்றங்கள் மெய்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

“14—7—53-ம் தேதி, லால்குடியில் நடந்த பொதுக்கூட்டத்தில் 1-வது எதிரியும், 23-வது எதிரியும் கலந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு போலீசு சப்-இன்ஸ்பெக்டர் தாக்கல் செய்திருக்கும் விளம்பர அறிக்கைகள் சாட்சியமாக உள்ளன.

“அந்த விளம்பரத் தாள்களில், ‘போராட்டம்’ என்று உச்சரிக்கப்பட்டிருக்கிறது. போராட்டம் என்றால், சாத்வீகமானது என்று பொருளாகவில்லை; பலாத்காரமான நடவடிக்கையென்றுதான் பொருள்படுகிறது.

“கல்லடியால் போலீசுக்காரர்கள்தான் காயப்பட்டிருக்கிறார்கள்; தி. மு. கழகத்தினருக்கோ, எதிரிகளுக்கோ கல்லடியால் காயமில்லை; ஆகையால், எதிரிகள், போலீசைக் கல்லாலடித்ததால், இ. பி. கோ. 332 சட்டப்படி எதிரிகள்மீது குற்றம் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

“ரயில்வே தண்டவாளத்தில் இருமுறை உட்கார்ந்தவர்களை இருமுறை கைது செய்தோம்; ஆனால், 3-வது தடவை பெருந்திரளாகக் கூட்டம்கூடி ரயில்வே தண்டவாளத்தில் உட்கார்ந்த போது, அவர்களைக் கைது செய்யப் போதிய போலீசார் என்னிடம் அப்போது இல்லை,’ என்று அரியலூர் டிப்டி கலெக்டர் சாட்சியத்தில் கூறியுள்ளார். அரசாங்கத் தரப்பில் உத்தியோகஸ்தரல்லாத பொதுமக்களாகச் சாட்சிகள் 12, 13, 17, ஆகியவர்கள், டால்மியாபுரத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிச் சாட்சியம் கூறியிருக்கிறார்கள்.”

பிறகு கீழ்கண்டவாறாக எதிரிகள் மீது குற்றப்பத்திரிகை வாசிக்கலாம் என்று கூறினார்:—

“எல்லா எதிரிகள் மீதும் இ பி. கோ 147-வது சட்டத்தையும், 9, 13, 22, 24 எதிரிகள் மீது இ. பி கோ 332-வது சட்டத்தையும்; 17லிருந்து, 23-வது எதிரிகள் வரை 332-வது சட்டத்தையும், இ பி. கோ. 114-வது சட்டத்தையும், 1-லிருந்து 8 10, 11, 12, 14, 16, 18-லிருந்து 21-வது எதிரிகள் வரை இ பி. கோ. 332, இதனுடன் 149-வது சட்டத்தையும்; மேலும், 1, 11, 14, 16, 17-லிருந்து 21 வரையுள்ள எதிரிகள்மீது 126-வது ரயில்வே சட்டத்தையும் சுமத்தலாம்” என்றார்.

* * *

சர்க்கார் தரப்பு வழக்கறிஞரின் வாதத்திற்குப் பதில் கூறும் முறையில், எதிரிகளின் வழக்கறிஞர் திரு வி. வாசுதேவ அனந்தர் விவாதித்ததாவது:—

‘போராட்டம் என்றால், பலாத்கார நடவடிக்கை என்று கூட்டு வார்த்தை கூறுவது தவறு என்றும், சாத்வீக முறையில் சத்யாக்கிரகம் செய்வதற்கே போராட்டம் என்று தமிழ் வார்த்தை கூறுவது வழக்கமாக நம் நாட்டில நீண்டகாலமாக இருந்து வருகிறது.

“சட்ட விரோதமான கும்பல் என்று கூறும்போது, சர்க்கார் வழக்கறிஞர் சுட்டிக் காட்டிய சட்டங்கள், கொலை வழக்கில் குறைவானவர்கள் அடங்கிய நிர்மாணமான கூட்டத்தைப் பற்றியது; இதுபோன்ற 2000 பேர் கூட்டத்தில் நடந்துள்ள நிகழ்ச்சிக்கு அது பொருந்தக் கூடாது” என்றார்.

நீதிபதி, வழக்கை 30-11-53க் தேதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

ஐவர் விடுதலை—

வரவேற்பு பாராட்டு இதழ்

“30—11—53ல், சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடக்க இருக்கும் வரவேற்பு கூட்டத்தின் போது, தி. மு. கழகத் தலைவர்கள் ஐவருக்கும் “பாராட்டு இதழ்,” சிறந்த ஆர்ட் தாளில், ஐவரின் அழகிய படங்களுடன், கண்ணையும் கருத்தையும் கவரும் முறையில் தயாரிக்கப்பட்டுத் தோழர்களுக்குக் குறைந்த கட்டணத்திற்கு தரப்பட இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்,” என சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கண்ணபிரான் அறிவிக்கிறார்.

கருணாநிதி நிகழ்ச்சிகள்

★

நவ.	29 :	சென்னை
டிச.	2 :	வாணியம்பாடி
	5 :	கோவை
	6 :	தஞ்சை
	13 :	மதுரை

★★★★★★★★★★★

சென்னை 37-வது வட்ட தோழர்களுக்கு

“சென்னை இராயப்பேட்டை தி. மு. கழக 37-வது வட்டத்தின் சார்பில், கல்வித் திட்ட எதிர்ப்பு மறியலிலும், கண்டனக் கூட்டம் நடத்தியும் சிறை சென்று மீண்ட தோழர்களுக்கு, 29—11—53 ஞாயிறு காலை 9 மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் எஸ். சுந்தரம் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெறும். 37வது வட்ட கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்” என்று செயலாளர் அறிவிக்கிறார்.

சென்னை 6-வது வட்ட

தி. மு. கழக உறுப்பினர்களுக்கு கழக இல்லத்தில் 29—11—53 ஞாயிறு காலை 9 மணியளவில் ‘பொது உறுப்பினர் கூட்டம்’ நடைபெறும். அதுபோது எல்லா உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்,” என்று செயலாளர் அறிவிக்கிறார்.

தூத்துக்குடி - சதி வழக்கு நிதி

‘பராசக்தி’ மூலம் வரவு

சென்னை, நவ 28—

தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக சென்னை 9-வது வட்ட தி. மு. கழக சார்பில், 22-11-53 ஞாயிறு காலை 10 மணிக்கு சென்னை சினிமா சென்ட்ரல் தியேட்டரில் ‘பராசக்தி’ திரையிடப்பட்டது.

வரவு—டிக்கெட் விற்பனை (வரி நீங்கலாக)	364-7-6
நன்கொடை மூலம்	87-11-0
மொத்த வரவு	452-2-6
செலவு — மொத்த செலவு	179-9-0
செலவு நீங்க வரவு	272-9-6
9-வது வட்ட தி மு. கழக நன்கொடை	27-6-6
நிதிக்காக அளிக்கப்படும் தொகை	300-0-0

ரூ. 300-ம் தூத்துக்குடி நிதிக்குக் கொடுக்கப்படும்.

★

நன்றி

சென்னை 9-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூலுக்காக, நேஷனல் பிக்சர்ஸ் கம்பெனியார், தமது ‘பராசக்தி’ படத்தை 22-11-53ல், சென்னை சினிமா சென்ட்ராலில் காட்சிக்குக் கொடுத்து உதவியமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். என்று தூத்துக்குடி நிதி வசூல் பொறுப்பாளர் அறிவித்துக் கொண்டார்.

‘எனது பதவி ஏற்பை அல்லாடி காணாதது எனக்குத் துக்கமாக இருக்கிறது’

கே. உமாமகேஸ்வர அய்யர் நீதிபதியானர்!

சென்னை, நவ 26—

உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டுள்ள கே. உமாமகேஸ்வர அய்யர், இன்று பிரமாணம் செய்து பதவியில் அமர்ந்தார்.

அவரைப் பாராட்டிப் பேசிய அட்வகேட் ஜெனரல் வி கே. திருவேங்கிடாச்சாரியார், ஆந்திராவிற்குத் தனி உயர்நீதி மன்றம் தேவை என்று தீர்மானித்த பிறகு முதல் முதலாக நீதிபதியாகப் பதவியேற்பவர் அய்யர்தான் என்று குறிப்பிட்டு, அவருடைய ஆற்றல் பற்றிப் புகழ்ந்து கூறினார்.

அதற்குப் பதில் சொல்லும் வகையில், ‘என்னைப் பாராட்டிய திருவேங்கடாச்சாரியாரும், நானும் சென்ற அல்லாடியிடம் பயிற்சி பெற்றவர்தான் என்றும், தம்முடைய சீடர்கள் பதவி பெற்றதைக் காணுவதற்கு அல்லாடி இல்லாமல் போனது வருந்தக்கூடிய விஷயமாகும்’ என்றும் புதிய நீதிபதி உமாமகேஸ்வர அய்யர் குறிப்பிட்டார்.

திராவிட நாடு [illegible] அச்சுக்காக தோழர் [illegible] செழியன், எம். ஏ., அவர்களால், [illegible] அச்சகத்தில் அச்சிட்டு [illegible] வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: [illegible]